### மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# இலவச மருத்துவ முகாம்

## இன்று முதல் தொடங்குகிறது

சென்னை, ஜன.3-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் எம்.ஜி.எம். நல மையம் இணைந்து மக்கள் நலனுக்காக இலவச மருத்துவ முகாம்களை நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. அதன்படி 3-ந் தேதி (இன்று) முதல் வருகிற 31-ந் தேதி வரை காலை 8 மணி முதல் 11 மணி வரை கீழ்க்கண்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட உள்ளது.

இடங்கள் விவரம் வருமாறு:-

3-ந் தேதி (இன்று) - நேரு பார்க், 4-ந் தேதி (நாளை) - கீழ்ப்பாக்கம், 9-ந் தேதி - சென்டிரல், 10-ந் தேதி - செனாய்நகர், 11-ந் தேதி - அண்ணாநகர் கிழக்கு, 17-ந் தேதி - அண்ணாநகர் கோபுரம், 18-ந் தேதி - திருமங்கலம், 23-ந் தேதி - கோயம்பேடு, 24-ந் தேதி - சி.எம்.பி.டி., 25-ந் தேதி - அரும்பாக்கம், 31-ந் தேதி - வடபழனி.

இந்த மருத்துவ முகாமில் உயரம், எடை, ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, இதய துடிப்பு உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட தகவல் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.